வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.2884/அ4/2020 நாள் 16.08.2021

----

பொருள் : பள்ளிக் கல்வி – விலையில்லா மிதிவண்டிகள் 2020 – 2021 – 11ம் வகப்பு பயின்ற மாணவர்களுக்கு வழங்கப்பட்டது – இருப்பு மற்றும் தேவை மிதிவண்டிகள் பள்ளிகளுக்கு பகிர்ந்தளித்தல் – இம்மாவட்ட பள்ளிகளுக்கு நிரவல் செய்தது போக இருப்பில் உள்ள மிதிவண்டிகளை M/S Avon Cycle நிறுவனத்திடம் திரும்ப ஒப்படைக்க தெரிவித்தல் - சார்பு.

பார்வை :

1. சென்னை.5, பிற்பட்டோர் நல இயக்குநர் அவர்களின் கடித எண்.D3/2407/2020 நாள் 09.08.2021
2. சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்கள் கடிதங்கள் நாள் .08.2021

----

தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 2020-2021ஆம் கல்வியாண்டில் பயின்ற 11ம் வகுப்பு மாணவ / மாணவியர்களுக்கு மிதிவண்டிகள் பெற்று வழங்கப்பட்டது. மேலும், வேலூர் மாவட்டத்தில் உள்ள சில அரசு / நகராட்சி / நிதி உதவி / பகுதி நிதி உதவி பள்ளிகளில் 2020-2021ம் ஆண்டிற்கான மிதிவண்டிகள் வழங்கப்பட்ட பின்னரும் கூடுதல் தேவை உள்ளது எனவும், ஒரு சில பள்ளிகளில் மிதிவண்டிகள் கூடுதலாக இருப்பில் உள்ளது எனவும் பார்வை 2ல் உள்ளவாறு தலைமை ஆசிரியர்கள் கடிதம் மூலம் தெரியவருகின்றது.

பார்வை 1ல் காண் செயல்முறைகளின்படி, தேவையுள்ள பள்ளிகளுக்கு மாவட்டத்திற்குள்ளும், மீதி இருப்புகளை மற்ற மாவட்டங்களுக்கும் மாற்றி அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்துடன் தேவை உள்ள பள்ளிகளுக்கு நிரவல் செய்து ஆணையிடப்படுகிறது. இருப்பு உள்ள பள்ளி தலைமை ஆசிரியர்கள் உடன் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்களிடம் விலையில்லா மிதிவண்டிகளை ஒப்படைக்க தெரிவிக்கப்படுகிறது. மேலும் அவர்களிடமிருந்து ஒப்புதல் பெற்று இருப்பு பதிவேட்டில் பராமரிக்கவும் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் உள்ள பள்ளிகளுக்கு நிரவல் செய்தது போக மீதம் உள்ள விலையில்லா மிதிவண்டிகளை தங்கள் பள்ளிகளில் பெற்றுக் கொள்ள வரும் M/S Avon Cycle நிறுவனத்திடம் ஒப்படைத்துவிட்டு, பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் பெற்று வைத்துக்கொள்ள தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு : நிரவல் ஆணை

(ஒப்பம்) 16/08/2021

முதன்மைக் கல்வி அலுவலர், [ஒ.ப்பம்]
வேலூர்.

பெறுநர்
சம்பந்தப்பட்ட மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்
வேலூர் மாவட்டம்.